# புதிய விடியல் கோச்சிங்சென்டர்

# தேனி

அரசுப்பணிக்கோர் அடித்தளம்

**89 40 88 62 27**

Run By **PUTHIYA VIDIYAL TRUST**

**Email : puthiyavidiyaltheni.yahoo.co.in**

**www. puthiyavidiyaltheni.in**

*OFFICE :* **Amman store,T.A.M.C. COLONY OPP,**

**Bommyakoundanpatty, THENI.625 531.**

www.puthiyavidiyaltheni.in

Exam date : 06.11.2016

## TNPSC – GROUP – IV- பொதுத்தமிழ்

## வினா விடைகள் மற்றும் விளக்கங்கள்

எங்களுக்கு வேறு எங்கும் கிளைகள் கிடையாது.

முதல் வெளியீடு : 06.11.2016 (தேர்வு நாள்)

திருத்திய வெளியீடு :

1. 'தண்டமிழ் ஆசான் ,சாத்தன் நன்னூற் புலவன் ' என்று மணிமேகலை ஆசிரியர் சீத்தலைச் சாத்தனாரைப் பாராட்டியவர்

அ) கம்பர் ஆ) இளங்கோவடிகள் இ)திருத்தக்க தேவர் ஈ)காரியாசான்

***விடை : ஆ) இளங்கோவடிகள்***

சீத்தலைச் சாத்தனார்:

- சாத்தன் என்பது இயற்பெயர்.
- சீத்தலையில் (திருச்சி) பிறந்து மதுரையில் வாழ்ந்தவர்.
- கூல வாணிகம்(கூலம் - தானியம்) செய்தவர்.
- கடைச் சங்க காலப் புலவர்.
- இளங்கோவடிகளும் இவரும் சமகாலத்தவர்.
- தண்டமிழ் ஆசான், சாத்தன் நன்னூற்புலவன் - என இளங்கோவடிகளால் பாராட்டப்படுபவர்.
- காலம் கி.பி. 2 ஆம் நூற்றாண்டு

2.கம்பரைப் புரந்தவர் யார்?

அ)ஒட்டக்கூத்தர் ஆ)சடையப்ப வள்ளல் இ) சீதக்காதி ஈ)சந்திரன் சுவர்க்கி

www.puthiyavidiyaltheni.in

***விடை : ஆ)சடையப்ப வள்ளல்***

- கம்பர் பிறந்த ஊர்: தேரழுந்தூர் (நாகப்பட்டினம் மாவட்டம்)
- இயற்றிய நூல்கள்: ஏர் எழுபது, சிலை எழுபது, சரசுவதி அந்தாதி, சடகோபர் அந்தாதி, திருக்கை வழக்கம்,
- குலோத்துங்க சோழனின் அவைப்புலவர்.
  ஆதரித்த வள்ளல்: திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளல்
- கி.பி.12 ஆம் நூற்றாண்டு.
- கவிச் சக்கரவர்த்தி, கல்வியில் பெரியர் கம்பர் .
- விருத்தமெனும் ஒண்பாவில் உயர் கம்பன்.

3.ஜி.யு.போப் திருவாசகத்தை எந்த மொழியில் மொழி பெயர்த்தார்?

அ)பிரெஞ்சு ஆ) கிரேக்கம் இ)ஆங்கிலம் ஈ)ஜெர்மன்

***விடை : இ)ஆங்கிலம்***

- திருக்குறளை 40 ஆண்டுகளாகப் படித்து சுவைத்த போப் 1886 ஆம் ஆண்டில் அந்நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்
- தம் 86 வது அகவையில் 1900 ஆம் ஆண்டில் திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்
- தம் இறுதிக்காலத்தில் புறப்பொருள் வெண்பா மாலை, புறநானூறு திருவருட்பயன் முதலிய நூல்களையும் பதிப்பித்தார்

4.நடுவணரசு தமிழைச் செம்மொழியாக அறிவித்த ஆண்டு?

அ)2004 ஆ)2003 இ)2005 ஈ)2002

***விடை : அ)2004***

- 1901 – மதுரைத் தமிழ்ச்சங்க இதழான செந்தமிழில் பரிதிமாற்கலைஞரின் உயர்தனிச் செம்மொழி என்ற கட்டுரை வெளியிடப்பட்டது
- 1918 – மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபை தமிழைச் செம்மொழியாக அறிவிக்க தீர்மானம் நிறைவேற்றியது
- 1918 – சைவ சித்தாந்த மாநாட்டில் செம்மொழி தீர்மானம்
- 1919 – கரந்தைத் தமிழ்ச்சங்கம் செம்மொழி தீர்மானம்
- 1966 – உயர்தனிச் செம்மொழி ஆங்கிலநூல் தேவநேயப்பாவாணர்
- 2004 – நடுவணரசு தமிழைச் செம்மொழியாக அறிவித்தது

5.பெயரெச்சத்தை எடுத்து எழுது

அ)படித்து ஆ) எழுதி இ)வந்த ஈ) நின்றான்

***விடை : இ)வந்த***

- ஒரு பெயரைக்கொண்டு முடியும் முற்றுப்பெறாத வினைச்சொல்
- இது முக்காலத்திலும் வரும்

எ.கா:- படித்த மாணவன், படிக்கின்ற மாணவன், படிக்கும் மாணவன்

www.puthiyavidiyaltheni.in

6.பொருத்துக

பட்டியல் I பட்டியல் II

அ)அறுவை வீதி - 1. அந்தணர் வீதி

ஆ)கூல வீதி - 2.பொற்கடை வீதி

இ)பொன் வீதி - 3.ஆடைகள் விற்கும் வீதி

ஈ)மறையவர் வீதி - 4.தானியக்கடை வீதி

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 2 | 1 |
| B) | 3 | 4 | 2 | 1 |
| C) | 1 | 3 | 2 | 4 |
| D) | 2 | 1 | 3 | 4 |

***விடை : B) 3 4 2 1***

மதுரை வீதிகளின் பெயர்கள்

- அறுவை வீதி – ஆடைகள் விற்கும் கடைப்பகுதி
- கூல வீதி – தானியக்கடை
- பொன்வீதி – பொற்கடைகள்
- மன்னவர் வீதி – மன்னர்வாழும்,
- மறையவர்வீதி – அந்தணர் வீதி

7.துணி கலையரசியால் தைக்கப்பட்டது - இதற்குரிய செய்வினை தொடரை தேர்ந்தெடு

அ)கலையரசி துணி தைத்தாள் ஆ)கலையரசி தைத்தாள் துணி

இ)கலையரசி என்ன தைத்தாள் ஈ)கலையரசி துணியைத் தைத்தாள்

***விடை:*** ஈ)கலையரசி துணியைத் தைத்தாள்

8. “ஒறுத்தாரை ஒன்றாக வையாரே” - இத்தொடரில் “ஒறுத்தார்” என்பதன் இலக்கணக் குறிப்பு

அ)முற்றெச்சம் ஆ)தொழிற்பெயர் இ)வினையாலணையும் பெயர் ஈ)வினையெச்சம்

***விடை : இ)வினையாலணையும் பெயர்***

www.puthiyavidiyaltheni.in

- வினையைக் குறிக்காமல் வினை செய்தவரைக் குறிப்பது ஆகும்.
- வினைக்குரிய காலம் காட்டும்.
- பெயர்க்குரிய வேற்றுமை உருபுகளைப் பெற்று வரும்.

எ.கா. பெற்றானை, வந்தானை.

*வினையாலணையும் பெயர்*

1) தொழில் செய்பவருக்குப் பெயராய் வரும்.
2) மூவிடங்களிலும் வரும்.
3) முக்காலமும் காட்டும்.

9. வா - என்னும் வேர்ச்சொல்லின் வினையெச்சத்தைக் கூறு

அ)வந்தான் ஆ)வந்து இ) வருதல் ஈ) வந்த

***விடை : ஆ)வந்து***

- முற்றுப்பெறாத வினைச்சொற்கள் வேறொரு வினைமுற்றைக் கொண்டு முடிந்தால் அது வினையெச்சம் எனப்படும்

எ.கா:- படித்து வந்தான், ஓடிச் சென்றான்

இவ்வினையெச்சம் காலவகையால் மூவகைப்படும்

இறந்த காலம் - படித்து வந்தான்

நிகழ் காலம் - படித்து வருகின்றான்

எதிர் காலம் - படித்து வருவான்

10. பாரதிதாசனிடம் தொடக்க கல்வி பயின்றவர்

அ)முடியரசன் ஆ)வாணிதாசன் இ)சுரதா ஈ)மோகனரங்கன்

***விடை* : *ஆ)வாணிதாசன்***

- இயற்பெயர்:- எத்திராசுலு (எ) அரங்கசாமி
- பெயர்:- வாணிதாசன்
- பிறந்தஇடம்:- வில்லியனூர்(புதுவை)
- பெற்றோர்:- அரங்க திருக்காமு – துளசியம்மாள்
- சிறப்பு:- கவிஞரேறு, பாவலர்மணி – பட்டங்கள்,
- தமிழகத்தின் வேர்ட்ஸ் வொர்த் எனப் புகழப்படுகிறார்
- இவர் பாடல்கள் உருசியம், ஆங்கில மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது
- காலம்:- 22-07-1915 – 07-08-1974
- குழந்தை இலக்கியம் என்னும் பாடல் தொகுப்பிலிருந்து மெய்ப்பொருள் கல்வி என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ளது.

www.puthiyavidiyaltheni.in

11. "விடிவெள்ளி" என்ற புனைப்பெயரைக் கொண்ட கவிஞர்

அ)ஈரோடு தமிழன்பன் ஆ)மு.மேத்தா இ)சாலை.இளந்திரையன் ஈ)சுரதா

***விடை : அ)ஈரோடு தமிழன்பன்***

12.தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறை பரிசு பெற்ற சுரதாவின் நூல்

அ)துறைமுகம் ஆ)சுவரும் சுண்ணாம்பும் இ)தேன்மழை ஈ)இது எங்கள் கிழக்கு

***விடை* : *இ)தேன்மழை***

- உவமைக் கவிஞர் எனப் போற்றப்படுபவர்.
- இயற்பெயர்: இராசகோபாலன்.
- பிறப்பு: 23.11.1921 பழையனூர் (திருவாரூர் மாவட்டம்)
- பெற்றோர்: திருவேங்கடம் - செண்பகம்.
- பாரதிதாசன் மீது கொண்ட பற்றால் தம் பெயரை சுப்புரத்தின தாசன் என மாற்றிக் கொண்டார்.
- பெற்ற விருது பட்டம்: கலைமாமணி பட்டம், தமிழக அரசு – பாவேந்தர் விருது

*இயற்றிய நூல்கள்:* தேன்மழை, துறைமுகம், சுவரும் சுண்ணாம்பும், சுரதாவின் கவிதைகள் முதலியன. தேன் மழை கவிதை நூல் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறை வழங்கும் சிறந்த நூலுக்கான பரிசினைப் பெற்றுள்ளது. தேன் மழை நூல் - இயற்கை எழில் முதல் ஆராய்ச்சி வரை 16 பகுதிகள் உள்ளது.

13.எனக்கு வறுமையும் உண்டு ; மனைவி மக்களும் உண்டு ; அவற்றோடு மானமும் உண்டு - எனக் கூறியவர்

அ)பாவாணர் ஆ)காந்தி இ)தெ.பொ.மீ ஈ)அயோத்திதாசப் பண்டிதர்

***விடை : அ)பாவாணர்***

- பெற்றோர்:- ஞானமுத்து – பரிபூரணம்
- ஊர் - சங்கரன் கோவில்
- காலம் 07-02-1902 - 15-01-1981
- சிறப்பு – செந்தமிழ்ச் செல்வர், மொழிஞாயிறு, செந்தமிழ் ஞாயிறு, தமிழ்ப்பெருங்காவலர் என 174 சிறப்புப் பெயர்கள்
- உலகின் முதல் மாந்தன் தமிழன், தமிழன் தோன்றிய இடம் குமரிக்கண்டம் என்பதும் மொகஞ்சதாரோ, அரப்பா நாகரிகம் பழந்தமிழ் நாகரிகம் என்பதும் பாவாணரது ஆய்வுப்புலத்தின் இரு கண்களாம் - தமிழை வடமொழி வல்லாண்மையினின்றும் மீட்பதற்காகவே இறைவன் என்னைப் படைத்தான் என்றவர்
- தமிழ் வளர்த்தால் பசியும், பட்டினியும் பஞ்சாய்ப் பறந்துவிடும் என்று எண்ணியவர்
- தமிழ் வரலாறு, முதல் தாய்மொழி, தமிழ்நாட்டு விளையாட்டுகள் தமிழர் திருமணம், வடமொழி வரலாறு தமிழர் மதம் மண்ணிலே விண் பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பாடும் உயர்தரக் கட்டுரை இலக்கணம் சொல் ஆராய்ச்சிக் கட்டுரைகள் திருக்குறள் மரபுரை முதலான 43 நூல்களைப் படைத்துள்ளார்
- சொற்பிறப்பியல் அகரமுதலித்திட்ட இய்கநுராக 08-05-1974 இல் பணியமர்த்தப்பட்டார் 200க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளார்
- சென்னை அண்ணா சாலையில் இவரது பெயரில் நூலகம் இயங்கி வருகிறது
- இவர் படித்துப் பணியாற்றிய இராசபாளையத்திற்கு அருகிலுள்ள முறம்பில் பாவாணர் கோட்டம் அவர்தம் முழு உருவச்சிலை அவர் பெயரில் நூலகம் உள்ளது
- மதுரையில் 05-01-1981 அன்று நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டின் போது மாந்தன் தோற்றமும் தமிழர் மரபும் என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்

www.puthiyavidiyaltheni.in

14.குறுந்தொகை எனும் நூலைத் தொகுத்தவர்

அ)பூரிக்கோ ஆ)நல்லாதனார் இ)கணிமேதாவியார் ஈ)கார்மேகப்புலவர்

***விடை : அ)பூரிக்கோ***

15. ‘உத்தரவேதம்’ என்று அழைக்கப்படும் நூல்

அ)நாலாயிரத்திவ்விய பிரபந்தம் ஆ)நாலடியார் இ)திருக்குறள் ஈ)இன்னா நாற்பது

***விடை : இ)திருக்குறள்***

16. பொருந்தாத ஒன்றைத்தெரிவு செய்க

அ)ஏலாதி ஆ)ஆசாரக்கோவை இ)திரிகடுகம் ஈ)சிறுபஞ்சமூலம்

***விடை : ஆ)ஆசாரக்கோவை***

17.திரைக்கவித்திலகம் என்ற சிறப்புக்குரியவர்

அ)வாலி ஆ)உடுமலை நாராயணகவி இ)பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் ஈ)மருதகாசி

***விடை : ஈ)மருதகாசி***

- பெயர்:- அ.மருதகாசி
- ஊர்:- மேல்க்குடிகாடு (திருச்சி மாவட்டம்)
- பெற்றோர்- அய்யம் பெருமாள் - மிளகாயி அம்மாள்.
- சிறப்பு:- திரைக்கவித் திலகம் எனப்போற்றப்பட்டவர்.
- காலம்:- 13-02-1920 – 29-11-1989
- 'திரைக்கவித் திலகம் அ.மருதகாசி பாடல்கள்' என்ற தலைப்பில் திரைக்கதைகளுக்கு எழுதிய பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன.
- உழவுத்தொழில், தாலாட்டு, சமூகம், தத்துவம், நகைச்சுவை என்னும் தலைப்புகளில் பாடல்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- ' ஏர்முனை' பாடல் 'சமூகம்' என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ளது.

18.பொருத்துதல்

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| அ)திணைமாலை நூற்றைம்பது | - 1. உ.வே.சாமிநாதையர் |
| ஆ)திரிகடுகம் | - 2.கணிமேதாவியர் |
| இ)திணைமொழி ஐம்பது | - 3.நல்லாதனார் |
| ஈ)புறப்பொருள் வெண்பாமாலை | - 4.கண்ணஞ்சேந்தனர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| **A)** | **3** | **1** | **2** | **4** |
| **B)** | **1** | **4** | **2** | **3** |
| **C)** | **2** | **3** | **4** | **1** |
| **D)** | **4** | **3** | **2** | **1** |

**விடை : C) 2 3 4 1**

| வ. எண். | நூல்கள் | பொருள் | பாக்கள் | ஆசிரியர்கள் | நூலின் காலம் கி.பி | சமயம் | கடவுள் வாழ்த்து |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | நாலடியார் | அறம் | 400 | சமண முனிவர்கள் | 7 | சமணம் | அருகன் |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 2. | நான்மணிக்கடிகை | அறம் | 104 | விளம்பி நாகனார் | 4 | வைணவம் | மாயவன் |
| 3. | இன்னா நாற்பது | அறம் | 40 | கபிலர் | 4 | சைவம் | சிவன் பலராமன் மாயோன்முருகன் |
| 4. | இனியவை நாற்பது | அறம் | 40 | பூதஞ்சேந்தனார் | 5 | சைவம் | மும்மூர்த்திகள் |
| 5. | திரிகடுகம் | அறம் | 100 | நல்லாதனார் | 5 | வைணவம் | மாயவன் |
| 6. | ஆசாரக்கோவை | அறம் | 100 | கயத்தூர் பெருவாயின்முள்ளியார் | 5 | சைவம் | சிவன் |
| 7. | பழமொழி | அறம் | 400 | முன்றுரை அரையனார் | 5 | சமணம் | அருகன் |
| 8. | சிறுபஞ்சமூலம் | அறம் | 100 | காரியாசான் | 5 | சமணம் | |
| 9. | ஏலாதி | அறம் | 80 | கணிமேதாவியார் | 5 | சமணம் | |
| 10. | முதுமொழிக்காஞ்சி | அறம் | 100 | கூடலூர் கிழார் | 5 | | |
| 11. | முப்பால் (திருக்குறள்) | அறம் | 1330 | திருவள்ளுவர் | 2 | ----------- | -------------- |
| 12. | ஐந்திணை ஐம்பது | அகம் | 50 | மாறன் பொறையனார் | 4 | | |
| 13. | திணைமொழி ஐம்பது | அகம் | 50 | கண்ணஞ்சேந்தனார் | 5 | வைதிகம் | |
| 14. | ஐந்திணை எழுபது | அகம் | 70 | மூவாதியார் | 5 | | விநாயகர் |
| 15. | திணைமாலை நூற்றைம்பது | அகம் | 150 | கணிமேதாவியார் | 5 | சமணம் | |
| 16. | கைந்நிலை(ஐந்திணை அறுபது) | அகம் | 60 | புல்லங்கடனார் | 5 | | |
| 17. | கார் நாற்பது | அகம் | 40 | மதுரைக்கண்ணன் கூத்தனார் | 5 | வைணவம் | |
| 18. | களவழி நாற்பது | புறம் | 40 | பொய்கையார் | | வைணவம் | |
| | இன்னிலை | அறம் | 45 | பொய்கையார் | 5 | வைணவம் | |

www.puthiyavidiyaltheni.in

19. 'இல்லை' - என்பதன் இலக்கணக் குறிப்பு கூறுக

அ)தெரிநிலை வினைமுற்று ஆ)எதிர்மறை பெயரெச்சம் இ)குறிப்பு வினைமுற்று ஈ)வியங்கோள் வினைமுற்று

***விடை : இ)குறிப்பு வினைமுற்று***

குறிப்பு வினைமுற்று:

- பொருள் முதல் ஆறனையும் அடிப்படையாகக் கொண்டு, செய்பவன் முதலான ஆறனுள் கருத்தா ஒன்றனை மட்டும் தெரிவித்துக் காலத்தைக் குறிப்பாகக் காட்டும் வினைமுற்று குறிப்பு வினைமற்று

எ.கா:- அவன் பொன்னன் - பொருள்

அவன் விழுப்புரத்தான் - இடம்

அவன் சித்திரையான் - காலம்

20. "Might is right' - இதன் தமிழாக்கம்

அ)கடமையே உரிமை ஆ)வல்லான் வகுத்ததே வாய்க்கால்

இ)வலிமையே சரியான வழி ஈ)ஒற்றுமையே வலிமை

***விடை* : *இ)வலிமையே சரியான வழி***

21.பொருத்துக:

பட்டியல் I பட்டியல் II

அ)குமரன் ,தென்னை - 1. இடப்பெயர்

ஆ)காடு ,மலை - 2.காலப்பெயர்

இ)பூ ,காய் - 3.பொருட்பெயர்

ஈ)திங்கள் , வாரம் - 4.சினைப்பெயர்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 4 | 1 | 3 | 2 |
| B) | 3 | 1 | 4 | 2 |
| C) | 3 | 4 | 2 | 1 |
| D) | 2 | 3 | 1 | 4 |

***விடை* : B) 3 1 4 2**

22.பம்மல் சம்பந்தம் நிறுவிய நாடக சபை

அ)சுகுண விலாச சபை ஆ)மாடர்ன் தியேட்டர் இ)பாய்ஸ் கம்பெனி ஈ)கூத்துப்பட்டறை

***விடை* : *அ)சுகுண விலாச சபை***

பம்மல் சம்பந்தனார் (1875 – 1964)

- 1891 ஆம் ஆண்டு தம் பதினெட்டம் வயதில் சுகுணவிலாச சபையைத் தொடங்கி நாடகத்தை வளர்த்தார்
- நடிகர்களால் கலைஞர் என மதிக்கப்பட்டவர்
- நீதிமன்றத்தில் பணியாற்றிய இவர் நாடகக்கலையினுள் புகுந்தார்
- 94 நாடகங்களைப் படைத்தார்



www.puthiyavidiyaltheni.in

- மனோகரா, யயாதி, சிறுத்தொண்டன், கர்ணன், சபாபதி, பொன்விலங்கு என்பன அவற்றுள் சில
- சேக்ஸ்பியரின் நாடகங்களைத் தழுவி வாணிபுரத்து வணிகன், விரும்பிய விதமே, அமலாதித்தியன் முதலிய நாடகங்களைப் படைத்தார்
- இவரது படைப்பான சபாபதி நாடகப்பாத்திரம் இன்றளவும் மறக்க முடியாத நகைச்சுவைப் பாத்திரமாகும்
- பரிதிமாற் கலைஞர் - தமிழ் நாடகப் பேராசிரியர்
- சங்கரதாசு சுவாமிகள் - தமிழ் நாடகத் தலைமை ஆசிரியர்
- பம்மல் சம்பந்தனார் - தமிழ் நாடகத் தந்தை

23. 'இந்திய அரசியலில் சாணக்கியர்' என்று போற்றப்பட்டவர்

அ)காந்தியடிகள் ஆ)பாலகங்கார திலகர் இ)இராசகோபாலாச்சாரியார் ஈ)சர்தார் வல்லபாய்படேல்

***விடை* : *இ)இராசகோபாலாச்சாரியார்***

24.பூக்களில் சிறந்த பூ "பருத்திப்பூ" எனக் கூறியவர்

அ)சோமசுந்தர பாரதியார் ஆ)திரு.வி.கலியாண சுந்தரனார்

இ)பாரதிதாசன் ஈ)தாரா பாரதி

***விடை* : *ஆ)திரு.வி.கலியாண சுந்தரனார்***

www.puthiyavidiyaltheni.in

25. 'குயில்' என்ற இதழை நடத்தியவர்

அ)சுரதா ஆ)வாணிதாசன் இ)பாரதியார் ஈ)பாரதிதாசன்

***விடை* : *ஈ)பாரதிதாசன்***

26.திருக்குறளில் ஏழு என்னும் எண்ணுப்பெயர் எத்தனை குறட்பாவில் இடம் பெற்றுள்ளது?

அ)11 ஆ) 09 இ)08 ஈ)10

***விடை* : *இ)08***

- திருக்குறளில் இடம்பெறாத ஒரே எண்- ஒன்பது.
- திருக்குறளில் கோடி என்ற சொல் ஏழு இடங்களில் இடம்பெற்றுள்ளது.
- எழுபது கோடி என்ற சொல் ஒரே ஒரு குறளில் இடம்பெற்றுள்ளது.
- ஏழு என்ற சொல் எட்டுக் குறட்பாக்களில் எடுத்தாளப்பட்டுள்ளது.

27.கீழ்க்கண்ட நூற்களில் தமிழ் மூவாயிரம் என்னும் வேறுபெயர் கொண்ட நூல் எது?

அ)திரிகடும் ஆ)திருவள்ளுவமாலை இ)திருமந்திரம் ஈ)திருக்குறள்

***விடை* : *இ)திருமந்திரம்***

- பெயர்:- மூலன் என்றும் பெயர், திரு என்னும் பெயரடை பெற்று, அத்துடன் அர் என்னும் மரியாதைப் பன்மையும் பெற்று திருமூலர் என ஆயிற்று.
- காலம்:- 5 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி
- சைவத் திருமறைகளில் பத்தாம் திருமுறை (மொத்தம் 12 சைவத் திருமுறைகள்) உள்ளன.
- இந்நூலுக்கு தமிழ் மூவாயிரம் என்னும் வேறு பெயரும் உண்டு.
- மொத்தம் 3000 பாடல்களைக் கொண்டது.
- ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பது இந்நூலின் புகழ்பெற்ற தொடர்

28. "தொண்டாசீர் பரவுவார்" என்று போற்றப்படுபவர் யார்?

அ)அப்பூதியடிகள் ஆ)திருநாவுக்கரசர் இ)சேக்கிழார் ஈ)திருஞானசம்பந்தர்

***விடை: இ)சேக்கிழார்***

- பெரியபுராணத்தை இயற்றியவர்.
- தற்போதைய காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள குன்றத்தூரில் பிறந்தவர்.
- இயற்பெயர் அருண்மொழித்தேவர்.
- அநபாயச் சோழனிடம் தலைமை அமைச்சராகத் திகழ்ந்தவர்.
- உத்தமசோழப் பல்லவர் என்னும் பட்டம் பெற்றவர்.
- தெய்வச் சேக்கிழார், தொண்டர் சீர்பரவுவார் என்றும் போற்றுவர் .
- காலம் கி.பி 12 ஆம் நூற்றாண்டு.

www.puthiyavidiyaltheni.in

29.யாருடைய அறிவுரைப்படி ஆதிரையிடம் மணிமேகலை முதன் முதலில் பிச்சையேற்றாள்?

அ)கவுந்தியடிகள் ஆ)மாதவி இ)அறவணவடிகள் ஈ)கண்ணகி

***விடை: இ)அறவணவடிகள்***

- கோவலன் - மாதவி மகள் - மணிமேகலை.
- அரசகுமாரன் உதயகுமாரன் - மணிமேகலையை காதல் செய்கிறான் (முற்பிறப்பின் வினைப்பயன் காரணம்).
- பழம்பிறப்பை உணர்ந்தவள் - மணிமேகலை - இடம் மணிபல்லவத் தீவு
- மணிமேகலா தெய்வம் மூலம் 3 மந்திரங்கள் (பசியற்றிருத்தல், விரும்பும் உருவம் எடுத்தல், வான்வழிச் செல்லுதல்) பெற்றாள் மணிமேகலை.
- தீவதிலகை உதவியால் அமுதசுரபி பெற்றாள்.
- முதன்முதலில் மணிமேகலை பிச்சை பெற்றது – ஆதிரை(அறவண் அடிகள் அறிவுரையின்படி) முற்பிறப்பில் அமுதசுரபி ஆபுத்திரனிடம் இருந்தது.

30.ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல்லை அறிதல்

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| அ)Writs | - 1. வாரிசுரிமைச்சட்டம் |
| ஆ)Succesion Act | - 2.உரிமைச்சட்டங்கள் |

இ) Substantive Law - 3.சான்றுச்சட்டம்

ஈ) Evidence Act - 4.சட்ட ஆவணங்கள்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 1 | 3 | 4 | 2 |
| B) | 4 | 1 | 2 | 3 |
| C) | 2 | 4 | 3 | 1 |
| D) | 1 | 2 | 3 | 4 |

***விடை*** : **B) 4 1 2 3**

31.யாழ் கேட்டு மகிழ்ந்தாள் - இவ்வாக்கியத்தில் யாழ் என்பது

அ)சொல்லாகு பெயர் ஆ)கருத்தாகு பெயர் இ)காரியவாகு பெயர் ஈ)கருவியாகுபெயர்

***விடை : ஈ)கருவியாகுபெயர்***

ஆகுபெயர் - வகைகள்: - 16

1) எண்ணல் அளவை ஆகுபெயர் - ஒன்று பெற்றால் ஒளி மயம்
2) எடுத்தல் அளவை ஆகுபெயர் - ஐந்து கிலோ கொடு
3) முகத்தல் அளவை ஆகுபெயர் - நான்கு லிட்டர் தேவை
4) நீட்டல் அளவை ஆகுபெயர் - மூன்று மீட்டர் தா
5) சொல்லாகு பெயர் - வள்ளுவர் சொல் வாழ்க்கைக்கு இனியது

   சொல்லைக் குறிக்காது பொருளுக்கு ஆகி வந்துள்ளது.

6) தானியாகு பெயர்: - பாலை இறக்கு.

   பாலைக் குறிக்காமல் பாத்திரத்தைக் குறிக்கிறது. ஒரு பொருளின் பெயர்(தானி), அது சார்ந்திருக்கும் இடத்திற்கு (தானத்திற்கு) ஆகி வருவது. பொருள் இடத்திற்கு ஆகி வருவது.

7) கருவியாகு பெயர்: யாழ் கேட்டு மகிழ்ந்தேன்.

   கருவி இசைக்கு ஆகி வந்துள்ளது. கருவியைக் குறிக்காமல் காரியத்தைக் குறிக்கிறது.

8) கருத்தாவாகு பெயர்: திருவள்ளுவரைப் படித்துப் பார்
9) காரியவாகு பெயர்: நான் சமையல் கற்றேன்.

   காரியத்தின் பெயர் கருவிக்கு(காரணம்) ஆகி வந்துள்ளது.

உவமையாகு பெயர்: நாரதர் வருகிறார்.

32.வாரணம் ,பெளவம் ,பரவை ,புணரி என்பது யைக் குறிக்கும்



www.puthiyavidiyaltheni.in

அ)சிங்கம் ஆ)கடல் இ)மாலை ஈ)சந்தனம்

***விடை: ஆ)கடல்***

- கடல் - ஆழி, ஆர்கலி, முந்நீர், வாரணம், பௌவம், பரவை, புணரி.
- மரக்கலம் - கப்பல், கலம், கட்டுமரம், நாவாய், படகு, பரிசில், புணை, தோணி, தெப்பம், திமில், அம்பி, வங்கம், மிதவை, ப.்.றி, ஓடம்.

33.எயிறு என்னும் சொல் - சொல்லின் வகை

அ)திரிசொல் ஆ)இயற்சொல் இ)வினைத்திரிசொல் ஈ)பெயர்த்திரிசொல்

***விடை: ஈ)பெயர்த்திரிசொல்***

- பெயர்த்திரிசொல் - கிள்ளை தத்தை
- வினைத்திரிசொல் - ஏகினான்
- இடைத்திரிசொல் - யார்கொல்?
- உரித்திரிசொல் - கடிமணம்

34.அரியதாம் உவப்ப உள்ளத் தன்பினால் அமைந்த காதல்

கீழ்க்காணும் விடைகளுள் சரியான விடை எது?

அ)எதுகை மட்டும் வந்துள்ளது ஆ)எதுகையும் மோனையும் வந்துள்ளது

இ)எதுகை மோனை அந்தாதி வந்துள்ளன ஈ)மோனை மட்டும் வந்துள்ளது

***விடை: ஈ)மோனை மட்டும் வந்துள்ளது***

35.காரைக்குடி மீ.சு .உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றியவர்

அ)சுரதா ஆ)கண்ணதாசன் இ)முடியரசன் ஈ)நா. காமராசன்

***விடை: இ)முடியரசன்***

- பெயர்:- முடியரசன்.
- இயற்பெயர்:- துரைராசு.
- பெற்றோர்:- சுப்பராயலு – சீதாலட்சுமி.
- ஊர்:- பெரியகுளம் (தேனி மாவட்டம்).
- நூல்கள்: பூங்கொடி, காவியப்பாவை, வீரகாவியம், முடியரசன் கவிதைகள்
- பட்டம்:- பறம்பு மலையில் நடந்த விழாவில் குன்றக்குடி அடிகளாரால் கவியரசு பட்டம் பெற்றார்.
- பரிசு:- பூங்கொடி என்னும் காவியத்துக்காக 1966இல் தமிழக அரசு பரிசு வழங்கியது.
- சிறப்பு:- பாரதிதாசன் பரம்பரைத் தலைமுறைக் கவிஞருள் மூத்தவர்.
    - தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணாவிடம் நெருங்கிப் பழகியவர்

காலம்:- 1920 – 1998

www.puthiyavidiyaltheni.in

36.வள்ளலார் பதிப்பித்த நூல்

அ)ஜீவகாருண்ய ஒழுக்கம் ஆ)சின்மய தீபிகை இ)இந்திர தேசம் ஈ)வீரசோழியம்

***விடை : ஆ)சின்மய தீபிகை***

வள்ளலார் பதிப்பித்த நூல்கள்

1. சின்மய தீபிகை
2. ஒழிவிலொடுக்கம்
3. தொண்ட மண்டல சதகம்

- இயற்றிய உரைநடை நூல்கள் :மனுமுறை கண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம்

37.கவிஞர் சிற்பியின் சாகித்திய அகாதமி பரிசு பெற்ற நூல்

அ)ஒளிப்பறவை ஆ)சிரித்த முத்துக்கள் இ)ஒரு கிராமத்து நதி ஈ)நிலவுப்பூ

***விடை: இ)ஒரு கிராமத்து நதி***

- **2002 - *ஒரு கிராமத்து நதி* (கவிதைகள்) – சிற்பி பாலசுப்ரமணியம்**

38.அகழாய்வில் முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்ட ஊர்

அ)தச்ச நல்லூர் ஆ)ஆதிச்ச நல்லூர் இ)பெவல்லூர் ஈ)பெரணமல்லூர்

***விடை: ஆ)ஆதிச்ச நல்லூர்***

- தூத்துக்குடி மாவட்டம் ஆதிச்சநல்லூரில் 1876, 2003 ஆகிய ஆண்டுகளில் நடத்தப்பட்ட அகழாய்வுகளில் ஏராளமான முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டன
- இத்தாழிகள் கி.மு 300 முதல் கி.பி 300 வரையிலான காலத்தைச் சார்ந்தவை

39. கம்பராமாயனத்தின் மணிமுடியாக விளங்கும் காண்டம்

அ)சுந்தர காண்டம் ஆ)அயோத்திய காண்டம் இ)ஆரண்ய காண்டம் ஈ)யுத்த காண்டம்

***விடை : அ)சுந்தர காண்டம்***

- மொத்தம் ஆறு காண்டங்கள்: பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம்
- பெரும் பிரிவு: காண்டங்கள்(6)
- உட்பிரிவு: படலங்கள்

40.நூறாசிரியம் என்னும் கவிதை நூலின் ஆசிரியர்

அ)கவிஞர் மீரா ஆ)கவிஞர் சுரதா இ)கவிஞர் பெருஞ்சித்திரனார் ஈ)மு.மேத்தா

***விடை : இ)கவிஞர் பெருஞ்சித்திரனார்***

- பெருஞ்சித்திரனார்:
    - இயற்பெயர்: துரை. மாணிக்கம்
    - பிறந்த ஊர்: சமுத்திரம் (சேலம் மாவட்டம்)
    - பெற்றோர் : துரைசாமி – குஞ்சம்மாள்
    - பிறப்பு : 10.03.1933, இறப்பு: 11.06.1995
- இயற்றிய நூல்கள்:
    - கனிச்சாறு, ஐயை, கொய்யாக்கனி, பாவியக் கொத்து, பள்ளிப் பறவைகள், நூலாசிரியம் போன்றன.
    - தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் - இதழ்கள் மூலம் உலகத் தமிழரிடையே தமிழுணர்வு உருவாகப் பாடுபட்டவர்.
    - பள்ளிப் பறவைகள் நூல் - மூன்று பிரிவுகள். அவை(குஞ்சுகளுக்கு, பறவைகளுக்கு, மணிமொழி மாலை)

## நூல்கள்

1. அறுபருவத் திருக்கூத்து
2. ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள்
3. இட்ட சாவம் முட்டியது
4. இனம் ஒன்றுபட வேண்டும் என்பது எதற்கு?
5. இலக்கியத் துறையில் தமிழ்வளர்ச்சிக்குரிய ஆக்கப் பணிகள்
6. இளமை உணர்வுகள்
7. இளமை விடியல்
8. உலகியல் நூறு
9. எண் சுவை எண்பது
10. ஐயை (பாவியம்)
11. ஓ! ஓ! தமிழர்களே
12. கற்பனை ஊற்றுக் கட்டுரைகள்
13. கழுதை அழுத கதை
14. கனிச்சாறு (எட்டு பாடற்தொகுதிகள்)
15. கொய்யாக் கனி (பாவியம்)
16. சாதித் தீமைகளும் அதை ஒழிக்கும் திட்டமும்
17. சாதி ஒழிப்பு
18. செயலும் செயல்திறனும்
19. தனித்தமிழ் இயக்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும்
20. தன்னுணர்வு
21. தமிழீழம்
22. திருக்குறள் மெய்ப்பொருளுரை பகுதி-1
23. திருக்குறள் மெய்ப்பொருளுரை பகுதி-2
24. திருக்குறள் மெய்ப்பொருளுரை பகுதி-3
25. திருக்குறள் மெய்ப்பொருளுரை பகுதி-4
26. நமக்குள் நாம்....
27. நூறாசிரியம்
28. நெருப்பாற்றில் எதிர் நீச்சல்
29. பள்ளிப் பறவைகள்
30. பாச்சோறு (குழந்தைப்பாடல்கள்)
31. பாவலரேறு பெருஞ்சித்திரனார் பாடல்கள்-1
32. பாவலரேறு பெருஞ்சித்திரனார் பாடல்கள்-2
33. பாவியக் கொத்து (இரண்டு தொகுதி)
34. பாவேந்தர் பாரதிதாசன்
35. பெரியார்
36. மகபுகுவஞ்சி
37. மொழி ஞாயிறு பாவாணர்
38. வாழ்வியல் முப்பது

39. வேண்டும் விடுதலை

41.மடங்கல் என்னும் சொல்லின் பொருள்

அ)மடக்குதல் ஆ)புலி இ)மடங்குதல் ஈ)சிங்கம்

***விடை :*** ஈ)சிங்கம்

நடலை – துன்பம்

நமன் - எமன்

தடக்கரி – பெரிய யானை

தாரை –வழி

அடவி – காடுமு

உழுவை – புலி

வெள்ளெயிறு – வெண்ணிறப் பற்கள்

வள்ளுகிர் - கூர்மையான நகம்

மடங்கல் - சிங்கம்

நிணம் - கொழுப்பு (இறைச்சி)

மதகரி – மதம் பொருந்திய யானை

கோடு- தந்தம்

இரும்பனை-பெரிய பனை

www.puthiyavidiyaltheni.in

42.அகநானூற்றின் கடைசி 100 பாடல்கள் அடங்கிய பகுதி

அ)களிற்று யாரை நிரை ஆ)மணிமிடைப்பவளம் இ)நித்திலக்கோவை ஈ)வெண்பாமாலை

***விடை: இ)நித்திலக்கோவை***

43.இங்கு உடனிலை மெய்ம்மயக்த்தைக் குறிக்கும் சொல்

அ)பொன்மனம் ஆ)ஆர்த்து இ)உற்றார் ஈ)சார்பு

***விடை: இ)உற்றார்***

- தன் எழுத்துடன் மட்டும் சேரும் எழுத்துகள் - உடனிலை மெய்ம்மயக்கம்.

44.பொருத்துக:

பட்டியல் I பட்டியல் II

அ)இரண்டு சீர்களான அடி - 1. நெடிலடி

ஆ)நான்கு சீர்களான அடி - 2.கழிநெடிலடி

இ)ஐந்து சீர்களான அடி - 3.குறளடி

ஈ)ஐந்துக்கும் அதிக சீரடி - 4.அளவடி

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 2 | 1 |
| B) | 2 | 1 | 3 | 4 |
| C) | 1 | 2 | 3 | 4 |
| D) | 3 | 4 | 1 | 2 |

***விடை*** : **D) 3 4 1 2**

45.அங்காப்பு என்பதன் பொருள்

அ)சலிப்படைதல் ஆ)வாயைத்திறத்தல் இ)அலட்டிக்கொள்ளுதல் ஈ)வளைகாப்பு

***விடை : ஆ)வாயைத்திறத்தல்***

www.puthiyavidiyaltheni.in

46. ‘கார்குலம்’ எனும் சொல் எவ்வேற்றுமைத்தொகையைக்குறிக்கும்

அ)ஐந்தாம் வேற்றுமைத்தொகை ஆ)மூன்றாம் வேற்றுமைத்தொகை

இ)ஆறாம் வேற்றுமைத்தொகை ஈ)நான்காம் வேற்றுமைத்தொகை

***விடை: இ)ஆறாம் வேற்றுமைத்தொகை***

47. சட்டை என்ற சிறுகதையை எழுதியவர்

அ)பார்த்தசாரதி ஆ)ஜெயகாந்தன் இ)மீரா ஈ)புதுமைப்பித்தன்

***விடை: ஆ)ஜெயகாந்தன்***

- வெளியான காலம் : 03/10/1965
- இதழின் பெயர் :ஆனந்த விகடன்

48.கிறிஸ்துவ சமயத்தாரின் கலைக்களஞ்சியம் எனப்போற்றப்படும் நூல்

அ)இரட்சண்ய மனோகரம் ஆ)இரட்சண்ய யாத்திரிகம்

இ)போற்றி திருவகல் ஈ)தேம்பாவணி

***விடை: ஈ)தேம்பாவணி***

- பெயர்: வீரமா முனிவர்.
- இயற்பெயர்: கான்ஸ்டாண்டின் ஜோசப் பெஸ்கி.
- பெற்றோர்:-கொண்டல் போபெஸ்கி – எலிசபெத் .
- பிறந்தஊர்:- காஸ்திக்கிளியோன் - இத்தாலி நாடு.
- அறிந்த மொழிகள்:- இத்தாலியம், இலத்தீன், தமிழ், சமஸ்கிருதம், கிரேக்கம், எபிரேயம், தெலுங்கு.
- தமிழ்க்கற்பித்தவர்:- மதுரை சுப்பிரதீபக் கவிராயர்.
- சிறப்பு:- 30 வது வயதில் தமிழகம் வந்து தமிழ் பயின்று காப்பியம் படைத்தமை.
- இயற்றிய நூல்கள் :- ஞானோபதேசம், பரமார்த்த குரு கதை, சதுரகராதி, தொன்னூல் விளக்கம், திருக்காவலூர்க் கலம்பகம் .
- காலம்:- 1680 – 1747
- தேம்பாவணி → தேம்பா + அணி, வாடாத மாலை
- தேம்பாவணி → தேன் + பா+ அணி, தேன் போன்ற இனிய பாடல்களாலான மாலை.
- இயேசு பெருமானின் வளர்ப்புத் தந்தையாகிய சூசையப்பரைத் தலைவராகக் கொண்டு பாடப்பட்டது.
- கிறித்தவச் சமயத்தாரின் கலைக்களஞ்சியம்
- 3 காண்டங்கள் 36 படலங்கள்
- மொத்தப் பாடல்களின் எண்ணிக்கை → 3615

49. மருமக்கள் வழி மான்மியம் - என்ற நூலை எழுதியவர்

அ)கவிமணி ஆ)சிவதாமு இ)பாரதிதாசன் ஈ)புதுமைப்பித்தன்

***விடை: அ)கவிமணி***

www.puthiyavidiyaltheni.in

<u>கவிமணியின் பிற நூல்கள்</u> :

- மலரும் மாலையும், மருமக்கள் வழி மான்மியம், குழந்தைச் செல்வம், ஆசிய ஜோதி போன்றன. காலம் கி.பி. 1876 – கி.பி.1954.

- "உள்ளத்து உள்ளது கவிதை", எனக் கூறியவர்.

50.தென்னிந்தியச் சமூக சீர்திருத்தத்தின் தந்தை என்று அழைக்கப்படுபவர்

அ)பெரியார் ஆ)அம்பேத்கர் இ)அயோத்திதாசப் பண்டிதர் ஈ)இராமலிங்க அடிகளார்

***விடை: இ)அயோத்திதாசப் பண்டிதர்***

- ஏறத்தாழ 150 ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தில் பிறந்து மாபெரும் மாற்றங்கள் நிகழ்வதற்கு வித்த0ட்டவர் காத்தவராயன் என்னும் அயோத்திதாசப் பண்டிதர் மக்கள் இவரை தென்னிந்தியச் சமூகச் சீர்திருத்தத்தின் தந்தை எனப் போற்றினர்
- சென்னை ஆயிரம் விளக்கில் உள்ள மக்கிமா நகரில் 20.05.1845 அன்று பிறந்தார் தந்தை கந்தசாமி
- வீ.அயோத்திதாசப் பண்டிதரிடம் கல்வியும் சித்த மருத்துவமும் பயின்றார் நீலகிரி மலைப்பகுதியில் வசிக்கும் தோடர் இனப்பிரிவில் கலப்புத் திருமணம் செய்து கொண்டு பத்து ஆண்டுகள் இரங்கூனில் வாழ்ந்தார் தேயிலை பறிப்போர், விவசாயக் கூலிவேலை செய்வோர் மரம், அறுப்போர் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டார்

- புத்த நெறியால் கவரப்பட்ட அயோத்திதாசர் புத்தமதக் கருத்துகளை மக்களுக்கு எடுத்துரைத்தார்

தனது மகன் மகள்களுக்கு பட்டாபிராமன். மாதவராம், சானகிராமன், இராசாராம், அம்பிகாபதி, மாயாதேவி எனப் பெயரிட்டார்

www.puthiyavidiyaltheni.in